ஆசிரியர் தேர்வு வாரியம்

**பத்திரிக்கைச் செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரிய 14.02.2025 மற்றும் 17.03.2025 நாளிட்ட பத்திரிக்கைச் செய்தியின்படி அண்ணா பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள், உதவி நூலகர்கள் மற்றும் உதவி இயக்குநர் (உடற் கல்வி) பணியிடங்களுக்கான தேர்வு 2025 ஏப்ரல் மாதம் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் CBT மூலம் காலை/மாலை இருவேளைகளில் நடத்தப்பட்டது.

இத்தேர்வில் 4,691 தேர்வர்கள் கலந்து கொண்டனர். தேர்வர்களின் Response sheet மற்றும் Objection Tracker ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளமான https://trb.tn.gov.in/ -ல் 16.04.2025 அன்று வெளியிடப்பட்டது.

மேலும், Objection Tracker-ல் வெளியிடப்பட்ட ஆசிரியர் தேர்வு வாரிய Master Question Paper-ல் உத்தேச தற்காலிக விடைக்குறிப்புகள் குறியீடு செய்யப்பட்டு, தேர்வர்கள் அவர்களது Response Sheet-ன் அடிப்படையில் உத்தேச விடைக்குறிப்பிற்கு 16.04.2025 பிற்பகல் முதல் 21.04.2025 இரவு 08:00 மணி வரை இணையவழியில் தங்களது ஆட்சேபணைகளை (Objections) தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்காண் தேதியில் பெறப்பட்ட அனைத்து ஆட்சேபகளையும் பாடவாரியாக வல்லுநர்குழு அமைக்கப்பட்டு முழுமையாக ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின் பாட வல்லுநர்கள் குழுவால் இறுதி செய்யப்பட்ட விடைக்குறிப்புகளின் அடிப்படையில் தேர்வர்களது விடைத்தாளினை மதிப்பீடு செய்து மதிப்பெண்கள் மற்றும் இறுதி விடைக்குறிப்பு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வெளியிடப்படுகிறது.

நாள்: 13.05.2025 தலைவர்